பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 26 | புதன்கிழமை | 11.12.2024 | அதிர்வு 131

## ஆபத்தான நிலையிலிருந்து தேறி வருகின்றார் சிவாஜி!



கொழும்பில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் 05



# கஜேந்திரகுமார் - செல்வம் கிளிநொச்சியில் சந்திப்பு!

## தீர்வுத் திட்ட வரைவு, தமிழ்த் தேசியக் கட்சிகளின் அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பில் முக்கிய பேச்சு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரெலோவின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் எம்.பியை நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்ட வரைவு மற்றும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. 05

# மீண்டும் கூட்டமைப்பாக செயற்படப் பேசுகின்றோம்

## ரெலோ தலைவர் கூறுகின்றார்



(கி.வசந்தன்)

முன்னர் ஒன்றாக இருந்த கட்சிகளை மீள ஒன்றிணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்படலாமா என்பது தொடர்பில் பேசிக்கொண்டிருக்கின்றோம் என்று ரெலோவின் தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுத் 05



# மர்மக் காய்ச்சலால் யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் பலி

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பரவி வரும் மர்மக் காய்ச்சல் காரணமாக, நேற்று செவ்வாய்க்கிழமையும் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதனால் நாளுக்கு நாள் நிலைமை ஆபத்தானதாக மாறி வருகின்றது என்று 02




புதிய சபாநாயகர் அசோக ரன்வலவின் 'கலாநிதி' பட்ட விவகாரம் மேலும் சூடு பிடித்திருக்கின்றது.

நாடாளுமன்ற இணையம் அவரின் சுயவிவரம் பற்றிய கணக்கில் அவரது பெயருக்கு முன்னால் போடப்பட்டிருந்த 'கலாநிதி' பட்டத்தை கடந்த 24 மணித்தியாலத்துக்குள் நீக்கி விட்டிருக்கின்றமை விடயத்தின் 'உண்மை தன்மையை' ஓரளவுக்கு வெளிப்படுத்தி நிற்கின்றது.

ரன்வல சபாநாயகராக நியமிக்கப்பட்ட போது நாடாளுமன்றத்தில் இருந்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு அவரை 'கலாநிதி அசோக ரன்வல' என்றே குறிப்பிட்டு இருந்தது.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் இரசாயனப் பொறியியல் பட்டம் பெற்ற அவர் ஜப்பானின் வஸேடாப் பல்கலைக்கழகத்தில் உயிரியல் இரசாயனத்தில் கலாநிதி பட்டம் பெற்றவர் என அந்தச் செய்திக் குறிப்பு தெரிவித்தது. அதுவே பிரச்சினையை இப்போது கிளப்பி இருக்கின்றது.

அப்பிரச்சினை பற்றிய விடயத்தை 05

# சட்டவிரோதமாகக் கடல் வழியாக நாடு திரும்ப முயன்ற 4 பேர் கைது



**(ந.லோகதயாளன்)**

இந்தியாவில் இருந்து இலங்கைக்குச் சட்டவிரோதமாகக் கடல் வழியாக வர முயன்ற நால்வர் நேற்று செவ்வாய்க் கிழமை இரவு இராமேஸ்வரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் கட்டப்பிராய், கோப்பாய் பகுதிகளில் இருந்து தமிழகத்துக்குப் படகு மூலம் சட்டவிரோதமாகச் சென்று முகாம்களில் தங்கியிருந்தோரே தாயகம் திரும்பும் நோக்கில் படகில் பயணிக்க முயன்றபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரில் 3 ஆண்களும், ஒரு பெண்ணும் அடங்குகின்றனர்.

நால்வரும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு திருச்சி சிறப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஐக்கிய மக்கள் சக்தியின்

# தேசியப் பட்டியல் பிரச்சினை நிறைவுக்கு வந்துவிட்டதாம்!

## பெயர் விபரங்களைச் சஜித் விரைவில் வெளியிடுவாராம்



ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட்டுள்ளது எனவும், அது தொடர்பான பெயர் விபரங்களைக் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விரைவில் வெளியிடுவார் எனவும் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைக்கப் பெற்ற ஐந்து தேசியப் பட்டியல் ஆசனங்களில் நான்கு ஆசனங்களுக்குரிய உறுப்பினர்களின் பெயர்கள் இன்னும் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

தேசியப் பட்டியல் வாய்ப்பைத் தோல்வி அடைந்த உறுப்பினர்களும், பங்காளிக் கட்சி உறுப்பினர்களும் கோருவதால் ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள் கடும் நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட்டுவிட்டதா என எழுப்பப்பட்ட கேள்விக்கே,

"பிரச்சினை தீர்ந்துவிட்டது, பெயர் விபரத்தை மட்டுமே அறிவிக்க வேண்டியுள்ளது. அதனைக் கட்சித் தலைவர் அறிவிப்பார்." – என்றும் அஜித் பி பெரேரா குறிப்பிட்டார்.

அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்குச் சாதகமான பெறுபேறு கிட்டும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## மர்மக் காய்ச்சலால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுகாதாரத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

ஐந்து நாள்கள் காய்ச்சலால் பிடிக்கப்பட்டிருந்த ஒரு பிள்ளையின் தாயாரே நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ். பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லூரி வீதி, ஓடக்கரையைச் சேர்ந்த சுரேஷ்குமார் ரஞ்சிதா (வயது 33) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காய்ச்சல் அறிகுறி தென்பட்டதைத் தொடர்ந்து அவர் பனடோல் மாத்திரைகளை உட்கொண்டு வந்துள்ளார். காய்ச்சல் நிற்காததை அடுத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அவர் சென்றுள்ளார். இதன்போது அவர் அங்கு மயங்கி வீழ்ந்துள்ளார்.

அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் அவரின் மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மேற்படி பெண்ணின் சுவாசத் தொகுதியில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், அவருக்கு உண்ணிக் காய்ச்சல் அல்லது எலிக் காய்ச்சல் ஏற்பட்டிருக்கலாம் என்று தெரியவருகின்றது. எனினும், எவ்வாறான நோயால் அவர் உயிரிழந்தார் என்பது கொழும்பில் இருந்து பரிசோதனை அறிக்கைகள் கிடைத்த பின்னரே உறுதிப்படுத்த முடியும் என்று சுகாதாரத் துறையினர் கூறியுள்ளனர்.

இதேவேளை, திடீர் காய்ச்சல் மற்றும் சடுதியான நோய் நிலை காரணமாக 23 வயதான யுவதி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பேரிடரால், எலிக் காய்ச்சல் பரவக்கூடிய சாத்தியங்கள் உள்ளன. எனவே, பொதுமக்கள் தமது சுகாதாரம், குடிதண்ணீர் ஆரோக்கியம் என்பவற்றில் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி அறிவுறுத்தல் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# அரசபுரம் மக்களைச் சந்தித்த சிறீதரன் எம்.பி. குடிதண்ணீர் பிரச்சினை குறித்து கேட்டறிவு!

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் பள்ளிக்குடா, அரசபுரம் கிராம மக்களுக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான மக்கள் குறைகேள் சந்திப்பு அரசபுரம் கிராமத்தில் நடைபெற்றது.

அப்பிரதேச நீரின் இருநீர்த்தன்மை காரணமாக குடிதண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் அப்பகுதி மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த பொதுக்கிணற்றைச் சூழவுள்ள குளப் பகுதியைக் கையகப்படுத்தியுள்ள இராணுவத்தினர், தினமும் மாலை 4 - 6 மணி வரை ஒரு குடும்பத்துக்கு 20 - 40 லீற்றர் என்ற மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே குடிதண்ணீரை விநியோகித்து வருவதால், தமது தேவைக்கேற்ப நிறைவான குடிதண்ணீரைப் பெறுவதற்கான வழியை ஏற்படுத்தித் தருமாறும், வீதிப் புனரமைப்பு மற்றும் பொதுப் போக்குவரத்துக்கான பஸ் சேவை உள்ளிட்ட தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்து தருமாறும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை, அரசபுரம் கிராமத்தைச் சேர்ந்த 6 பொது மக்களுக்குச் சொந்தமான 12 ஏக்கர் காணிகள் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ளதுடன், அந்தக் காணிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெறும் சமநேரத்தில், ஒரே நாளில் 34 டிப்பர் மணல் இராணுவத்தினரால் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் அரசபுரம் மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் சுட்டிக்காட்டினர்.

அந்தப் பிரதேச மக்களின் கோரிக்கைக்கு அமைவாக குடிதண்ணீர் விநியோக சீராக்கம், வீதிப் புனரமைப்பு, பஸ் சேவையை ஏற்படுத்தல் மற்றும் காணி அபகரிப்புக்கு எதிரான நடவடிக்கைகளைத் துரிதகதியில் மேற்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், அந்தப் பகுதி மக்களிடம் உறுதியளித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் மற்றும் அரசபுரம் கிராமத்தின் சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.
















# மின்சார சபைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 30 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி

இலங்கை மின்சார சபைக்கு 30 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியளிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

இது ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து இலங்கைக்கு வழங்கப்படும் முதலாவது சிறிய செலவின நிதி வசதி திட்டமாகும்.

இந்த நிதியுதவி புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் பங்கை ஊக்குவிப்பதற்கும், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் தனியாரின் பங்களிப்பை ஊக்குவிப்பதற்கும் வழிவகுக்கும் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டக்ஃபுமி கடோனோ தெரிவித்துள்ளார்.

# ஒபெக் நிதியத்துடன் கடன் உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி

சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்துடன் கடன் உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் அமுல்படுத்தப்படும் விரிவாக்கப்பட்ட நிதிவசதி திட்டத்துக்கு இணையாக இலங்கையில் மறுசீரமைப்பு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்துக்கு நிதியளிப்பதற்காக இலங்கை அரசாங்கத்தினால் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்திடம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கொள்கை அடிப்படையிலான கடன் திட்டத்தின் கீழ் 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்குவதற்குக் அந்த நிறுவனம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, இந்த கடன் தொகையைப் பெறுவதற்கான உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி இந்த மாதத்தின் முதல் ஏழு நாள்களில் 858 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர் என அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதி வரை 46,385 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.



குறிப்பாக, மேல் மாகாணத்தில் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தற்போது 19,927 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஏலவே இப்பத்தியில் கோடி காட்டி இருந்தேன்.

தமது கல்வித் தகைமை குறித்து உண்மைக்கு மாறான தகவல்களை முன்வைத்த அவர் சபாநாயகராக – நீதி வழங்கும் ஸ்தானத்தில் – இருக்கவே முடியாது, அவர் அப்பதவியை விட்டு விலக வேண்டும் என்று சில தரப்புகள் விடாப்பிடியாக வலியுறுத்துகின்றன.

மற்றும் சில தரப்புகளோ அதையும் தாண்டி, அசோக ரன்வல நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியபிரமாணம் எடுத்த சமயம் தம்மை 'கலாநிதி அசோக ரன்வல' என்றே குறிப்பிட்டு எடுத்துள்ளார், அது தவறு என்றால் அவருடைய சத்திய பிரமாணமே தவறு, ஆகையால் அவர் எம்.பி. பதவியையும் இழந்தவராவார் என்றும் கூட வலியுறுத்தத் தொடங்கியுள்ளன.

இந்த விடயம் குறித்து – குற்றச்சாட்டுக்கள் குறித்து – சபாநாயகர் தமது விளக்கத்தை விரைவில் அறிவிப்பார் என அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார்.

அதன்பின்னர் இவ்விடயத்தில் அரசு தரப்பின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்படும் என்றார் அவர்.

இந்தக் கலாநிதி சர்ச்சை வருகின்ற போது எனக்கு பழைய விடயம் ஒன்று நினைவுக்கு வருகின்றது.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை பலரும் 'கலாநிதி பால சிங்கம்' என்று விளித்தும் எழுதியும் வந்தனர். இன்னும் சிலர் இப்போதும் கூட அப்படி எழுதுவதுண்டு.

இலங்கை அரசுடனான அமைதிப் பேச்சுக்களின் போது கூட, பத்திரிகையாளர் மாநாடுகளிலும் பேச்சு மேசையிலும், 'டொக்டர் பாலசிங்கம்' என்றே இலங்கைப் பேச்சுக் குழுவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூட அழைப்பது வழமை.

ஆனால் பாலசிங்கம் எந்தச் சமயத்திலும் தமது சுயவிவரப் பதிவுகளில் தம்மை 'கலாநிதி' என்று அடைமொழி பயன்படுத்திக் குறிப்பிடுவதில்லை.

நான் பணியாற்றிய பத்திரிகை ஒன்றின் பத்தி எழுத்தாளர் ஒருவர் தமது பத்தியில் பல இடங்களில் 'கலாநிதி பாலசிங்கம்' என்று எழுதுவார். நான் பக்கப் புறாவ்களை பார்த்து 'கலாநிதி' என்ற அடைமொழியை நீக்கி விடுவேன்.

ஒரு தடவை அலுவலகத்திற்கு நேரில் வந்த அந்த பத்தியாளர் இது பற்றி என்னிடம் நேரடியாகவே கேட்டார். மதியுரையர் பாலசிங்கத்துடன் மிக நெருக்கமாகப் பழகுபவன் என்ற வகையில் உரிமையுடன் நான் பதிலளித்தேன்.

"பாலசிங்கம் தத்துவவியல் துறையில் கலாநிதி பட்டத்திற்குப் பதிவு செய்திருந்தார். பரீட்சை விடயங்களைத் தாண்டி, அவர் தமது கலாநிதி பட்டத்துக்கான ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. அந்தப் பணியை அவர் கணிசமாகப் பூர்த்தி செய்துமிருந்தார். அதற்கிடையில் தமது செயற்பாடுகளை இயக்கத்துடன் தீவிரமாக இணைத்துக் கொண்டமையால் அவர் மிகுதியைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. அதனால் அவர் கலாநிதி என்ற பட்டத்தைப் பயன்படுத்துவதில்லை. அவரை கலாநிதி பாலசிங்கம் என்று குறிப்பிடுவது தவறு." – என நான் விவரித்தேன்.

மதியுரைஞர் பாலசிங்கம் கடந்த பல நூற்றாண்டுகளில் ஈழத் தமிழர் தரப்பில் உருவான முதலாவது ராஜதந்திரி என்பதுதான் எனது கருத்து. கலாநிதி பட்டத்தை வழங்கி அல்லது பெற்றுத்தான் அவருக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்ற தேவை இல்லை என்பதே உண்மை. அவர் அதையும் தாண்டிய தீர்க்கதரிசி. இது அவருடன் நெருங்கி மனம் விட்டுப் பேசிக் கருத்துப் பரிமாறிப் பழகிய அனுபவத்தின் மூலம் நான் கண்ட – கொண்ட – உண்மை.

இன்னும் மூன்று நாள்களில் – வரும் சனிக்கிழமையன்று – அவரது 18 ஆவது நினைவேந்தல் வருவது குறிப்பிடத்தக்கது.

---

## மீண்டும் கூட்டமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம் ஆகியோரின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியில் இருந்து பெறப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் தெரிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

இதில் கலந்துகொண்ட பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்றக் குழுவில் ஒரு ஒற்றுமை வேண்டும் என்று நினைக்கிறேன். அந்த ஒற்றுமை இல்லாமையினால் எமது தேசத்தில் பல மாற்றங்கள் உருவாகியுள்ளன. அது தொடர்ந்தால் இங்கு இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிடும்.

எனவே, இனம் சார்ந்த விடுதலையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்

என்ற வகையில் நாம் ஒன்றிணைய வேண்டும். ஒன்றிணைந்தால் மக்கள் எங்களுடன் நிற்பார்கள்.

எனவே, நாடாளுமன்றுக்குள்ளும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு அணியாகச் சேர்ந்தும் பொது விடயங்களில் ஒன்றாகக் குரல் கொடுக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும்.

அத்துடன் வடக்கு – கிழக்கில் முன்னர் ஒன்றாக இருந்த கட்சிகளை மீள ஒன்றிணைத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்படலாமா என்பது தொடர்பிலும் பேசிக்கொண்டிருக்கின்றோம்.

பெருவாரியான வாக்குகளைப் பெற்ற இந்த அரசின் ஜனாதிபதி பேசியபோது ஒரு மணிகூட வெளியில் இருந்து இறக்க மாட்டோம் என்று சொல்லியிருந்தார். ஆனால், இன்று நிலைமை மாறி இறக்குமதி செய்யும் சூழல் வந்துள்ளது. சர்வதேச நாணய நிதிய விடயத்தில் எந்த வொரு மறுப்பும் தெரிவிக்காமல் இவர்கள் கையொப்பம் இட்டுள்ளனர்.

எனவே, இந்த நிலைமையில் அரசு சென்றால் மீண்டும் வரிசையுகம் வரும் சந்தர்ப்பம் ஏற்படும். எனவே, அரசு நிதானமாகச் செயற்பட வேண்டும்.

இன்று சாதாரண மக்கள் கூட தேங்காய் வாங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் சூழலை மாற்ற வேண்டும்." – என்றார்.

## ஆபத்தான நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சேர்க்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் உடல் நிலையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரான சிவாஜிலிங்கம் கொழும்புக்கு மருத்துவ பரிசோனைக்காகச் சென்றிருந்த நிலையில் திடீரென உடல் நிலை பாதிப்புக்குள்ளானதை அடுத்து கொழும்பு – கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள டேடன்ஸ் தனியார் வைத்தியசாலையில் கடந்த சனிக்கிழமை சேர்க்கப்பட்டு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அவர் கடந்த சனிக்கிழமை தொடக்கம் சுயநினைவற்ற நிலையில் காணப்பட்டார். எனினும், நேற்று செவ்வாய்க்கிழமை அவரது உடல்நிலையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று அறியமுடிந்தது.

---

## கஜேந்திரகுமார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அண்மையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை அடுத்து, இனிவருங்காலங்களிலேனும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி ஒன்றுபட்டுப் பயணிக்க வேண்டும் என்ற விடயம் பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

அதன்படி தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்ட முன்மொழிவை அடிப்படையாகக்கொண்டு ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேச்சுகளை நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாக அண்மையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.

அதேவேளை, இது பற்றிக் கருத்து வெளியிட்டிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி., ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஆகியோர் இந்தத் தீர்வுத் திட்ட முன்மொழிவு குறித்தும், அதற்கு அப்பாலும் பேச்சு நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த வாரம் சிறீதரன் எம்.பியை அவரது யாழ். இல்லத்தில் சந்தித்த கஜேந்திரகுமார் எம்.பி., புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு உள்வாங்கப்பட வேண்டியதன் அவசியம், அதனை முன்னிறுத்திய அடுத்த கட்ட நடவடிக்கைகள், தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்ட வரைவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் சிநேகபூர்வமாகக் கலந்துரையாடினார்.

அதேபோன்று செல்வம் அடைக்கலநாதன் எம்.பியையும் நேற்று சந்தித்து மேற்படி விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார் கஜேந்திரகுமார் எம்.பி.

கிளிநொச்சியில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரனும் பங்கேற்றிருந்தார்.

# மனித நேயமே இல்லாத நாட்டிலே மனித உரிமைகள் தினம் எதற்காக?

## மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் கேள்வி

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்றிய தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் ஏற்பாடு செய்த கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் இடம் பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படத்தை தாங்கியவாறு கையில் மெழுகுவர்த்தி ஏந்தி அமைதியான முறையில் ஈடுபட்டனர்.

இதன் போது போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார்கள் கூறியவை வருமாறு:–

சர்வதேச மனித உரிமைகள் தினம் எதற்காக நினைவு கூருகிறார்கள் என்று தெரியவில்லை. மனித நேயமே இல்லாத இந்த நாட்டிலே மனித உரிமைகள் தினத்தை நினைவு கூருவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை எனத் தெரிவித்தனர்.

கடந்த 15 வருட காலங்களாக காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளை மீட்க நாங்கள் வீதியில் நிற்கின்றோம். அயல் நாடுகள் என்றாலும் சரி, சர்வதேச நாடுகள் என்றாலும் சரி, எமது நாடாக இருந்தாலும் சரி, எங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

காணாமல் போனோரின் ஒவ்வொரு அம்மாவும் மன வேதனையுடன் உள்ளனர். இன்று நூற்றுக்கணக்கான அம்மாக்கள் உயிரிழந்துள்ளனர். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக் கொண்டிக்கின்றவர்கள் தற்போது குறைவானவர்களாகவே இருக்கின்றோம்.

இருக்கிறவர்களும் இறப்பதற்கு முன்னர் எங்களுடைய காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள் உறவுகளுக்கு ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம்.

மனித உரிமைகள் அமைப்புக்கள் பல இருந்தும் என்ன பலன் என்ற கேள்வியை எழுப்புகிறோம். எத்தனை மனித உரிமைகள் அமைப்புக்கள் இருந்தாலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக அவர்களின் செயல்பாடுகள் இல்லை.

எங்களுக்காக கதைப்பதற்கும் ஒருவரும் இல்லை. இந்த நிலையிலே சர்வதேச மனித உரிமைகள் தினத்தை கருப்பு தினமாக அனுஷ்டிக்கின்றோம். – என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்துகொண்டனர்.














# வலிந்து காணாமலாக்கப்பட்ட தமிழர்கள் தொடர்பில் விவாதம் நடத்த வருமாறு ஜே.வி.பிக்கு அழைப்பு விடுக்கின்றனர் தமிழ்த் தாய்மார்கள்

## நேற்றைய வவுனியா ஆர்ப்பாட்டத்தின்போது தெரிவிப்பு













(கி.வசந்தன்)

காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்கள் மற்றும் தமிழர் இறையாண்மைக்கான தேவை பற்றி விவாதம் நடத்த ஜே.வி.பிக்கு அழைப்பு விடுத்துள்ளனர் தமிழ்த் தாய்மார்கள்.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தால் வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது போராட்டக் கொட்டகைக்கு முன்பாக

ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதே தமிழ்த் தாய்மார் அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் அவர்கள் கருத்து தெரிவிக்கையில் –

மனித உரிமைகள் தினத்தன்று, தமிழ்த் தாய்மார்கள் ஜே.வி.பிக்கு காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்கள் மற்றும் தமிழர் இறையாண்மைக்கான தேவை பற்றி விவாதம் நடத்த அழைப்பு விடுக்கின்றோம்.

மனித உரிமைகள் தினம் ஆண்டு தோறும் டிசம்பர் 10 அன்று அனுசரிக்கப்படுகிறது. இது 1948 இல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை ஏற்றுக்கொண்டதைக் குறிக்கிறது. இந்த வரலாற்று ஆவணத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள கொள்கைகள் அன்று போலவே இன்றும் இன்றியமையாதவை. சிவில், அரசியல், சமூக, கலாச்சார மற்றும் பொருளாதாரம் என அனைத்து மக்களின் உரிமைகளையும் நிலைநாட்ட வேண்டும்.

இந்த மனித உரிமைகள் தினமான 2024 இல், தமிழ்த் தாய்மார்கள் தமது காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள் பற்றிய பதில்களுக்கான கோரிக்கையை புதுப்பித்து நீதியைக் கோருகின்றோம். வவுனியா நீதிமன்றத்திற்கு முன்பாக ஏ-9 வீதியூடாக தமது சாவடியில் நாங்கள் மேற்கொண்ட இடைவிடாத போராட்டம் இன்று 2,851ஆவது நாளைக் குறிக்கிறது. எங்களின் நோக்கம் தெளிவானது. காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகள் பற்றிய உண்மையை வெளிக்கொணர்வது, எதிர்கால இனப்படுகொலைகளைத் தடுப்பது மற்றும் தமிழர் இறையாண்மைக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேச ஆதரவைப் பெறுவது ஆகியன எங்கள் நோக்கம்.

மனித உரிமைக் கோட்பாடுகளுக்கு இணங்க, இலங்கையின் ஒரு முக்கிய தொலைக்காட்சி மேடையில் பொது விவாதத்திற்கு ஜே.வி.பி.க்கு சவால் விடுகிறோம். இந்த விவாதம் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் இருப்பிடம் மற்றும் தமிழர்கள் இறையாண்மையைக் கோருவதற்கான நியாயமான காரணங்களை எடுத்துரைக்க வேண்டும்.

முன்னாள் அமெரிக்கத் தூதுவர் றொபர்ட் பிளேக் குறிப்பிட்டது போல, கருணா, டக்ளஸ் போன்ற நபர்கள் தமிழர்களைக் கைப்பற்றி அவர்களை ஒப்படைப்பதற்கும், இலங்கை இராணுவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றவாளிகள் செய்த அட்டூழியங்களை எளிதாக்குவதற்கும் முக்கியப் பங்காற்றினர். இந்த நடவடிக்கைகள் பொறுப்புக்கூறலின் முக்கியமான தேவையை வலியுறுத்துவதுடன் தமிழர் இறையாண்மையின் அவசரத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

ஜே.வி.பி.யையும், தேவைப்பட்டால் ஜனாதிபதி அல்லது அமெரிக்காவில் படித்த பிரதமரையும் இந்த உரையாடலில் ஈடுபட அழைக்கிறோம். உண்மையான ஜனநாயகத்தில், திறந்த அரசியல் விவாதங்கள் மற்றும் விவாதங்கள் ஜனநாயக விழுமியங்களைப் புரிந்து கொள்வதற்கும் நிலை நிறுத்துவதற்கும் பொது மக்களை வழி நடத்துகின்றன. இந்த மனித உரிமைகள் தினம் நீதி, உண்மை, தமிழர் உரிமைகளை அங்கீகரிப்பதற்கான ஒரு படியாக அமையட்டும் எனத் தெரிவித்தனர்.

இதன்போது, தாய்மார் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கக் கொடிகளை ஏந்தியிருந்ததுடன், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் படங்களையும் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நாட்டைப் பீடித்த நோய்

எத்தனை சட்டங்கள் இயற்றப்பட்டாலும், நிறுவனங்கள் நிறுவப்பட்டாலும், அவற்றை அமுல்படுத்துவதற்கு பொறுப்பானவர்கள் அவற்றை முறையாக நடைமுறைப்படுத்தத் தவறினால், மக்களுக்கு நீதியை உறுதிப்படுத்த முடியாது என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

மக்களால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை அவர்களுக்குச் சேவை செய்வதற்குப் பயன்படுத்த வேண்டும் இல்லையெனில், அந்த சக்தி அர்த்தமற்றதாகிவிடும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அவர் குறிப்பிடுகின்ற இக்கருத்து முற்றிலும் உண்மை.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 'சர்வதேச ஊழல் எதிர்ப்பு தின தேசிய கொண்டாட்டம் - 2024' நிகழ்வின் போதே ஜனாதிபதி திஸநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த ஆண்டு சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் 'ஊழலுக்கு எதிராக இளைஞர்களுடன் ஒன்றிணைதல்: நாளைய ஒருமைப்பாட்டை உருவாக்குதல்' என்ற கருப்பொருளின் கீழ் நினைவுகூரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஊழல் மற்றும் லஞ்சத்தை ஒரு சமூக அவலமாக வர்ணித்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, அவற்றுக்கு எதிராகப் போரிடுவதற்கு இலங்கையில் ஏற்கனவே போதுமான சட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் உள்ளன எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஊழல் மற்றும் லஞ்ச விவகாரங்களைக் கட்டுக்குள் வைத்திருக்கும் விடயத்தில் 2013 இல் சர்வதேச சுட்டெண்ணில் 79 ஆவது இடத்தில் இருந்து 2023 இல் 115ஆவது இடத்திற்கு இலங்கை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தை கொண்டாடுவதன் பொருத்தம் குறித்து ஜனாதிபதி இந்த நிகழ்வில் கேள்வி எழுப்பியமை நியாயமானதே.

இலங்கையில் இந்த விடயங்களைக் கையாளும் பிரதான அமைப்பான லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் செயற்பாடுகளையும் - ஒரு வகையில் பார்த்தால் செயலின்மையையும் - ஜனாதிபதி விசனத்துடன் அங்கு சுட்டிக்காட்டியமை அவதானிக்கப்பட வேண்டியதாகும்.

2021 ஆம் ஆண்டில் லஞ்ச, ஊழல் விடயங்களை ஒட்டி ஆக 69 வழக்குகளே தாக்கல் செய்யப்பட்டன. அதில் 40 வழக்குகள் பின்னர் வாபஸ் பெறப்பட்டன. இதேபோல், 2022 இல் 89 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, 45 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன.

இப்படி லஞ்ச ஊழல் வழக்குகள் வாபஸ் பெறப்பட்டதன் பின்னணியில் உள்ள காரணங்கள் மற்றும் விசாரணை அதிகாரிகள் ஏன் இந்த வழக்குகளில் சாட்சிகளாக ஆஜராகத் தவறினார்கள் என்பது குறித்து மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தியிருக்கின்றார்.

லஞ்ச, ஊழல் ஆணைக்குழு ஒரே வருடத்தில் இரண்டு கான்ஸ்டபிள்கள், கிராம உத்தியோகத்தர் மற்றும் எழுத்தர் ஒருவருக்கு மாத்திரமே தண்டனை பெற்றுக் கொடுத்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இலங்கையில் சட்டம் ஒரு சிலந்தி வலை போன்று செயற்படுகிறது என்ற பரவலான பொதுக் கருத்தைக் குறிப்பிட்டார். அதே சமயம் சக்திவாய்ந்த நபர்கள் பாதிப்பின்றித் தப்புகிறார்கள் என்றார் அவர்.

ஊழல் மற்றும் மோசடிகள் வருடா வருடம் மோசமடைந்து வருகின்றன. அடுத்த ஆண்டுக்குள் இந்தப் பிரச்சினைகளைக் குறைப்பதில் உறுதியான முன்னேற்றம் ஏற்படவில்லை என்றால், இத்தகைய ஊழல் எதிர்ப்புத் தினக் கொண்டாட்டங்களுக்கு உண்மையான மதிப்பு இருக்காது. நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு அரச முறைமையை பூரணமாக மாற்றியமைக்க வேண்டும். அவ்வாறான சீர்திருத்தங்கள் இல்லாமல் ஆரோக்கியமான மற்றும் செயற்பாட்டு அரசை உருவாக்க முடியாது. சட்ட அமைப்பு மற்றும் அதன் நிறுவனங்களின் மீது பொதுமக்களின் நம்பிக்கை சிதைந்து விட்டது. தாமதமான நீதி மறுக்கப்பட்ட நீதியாகி விடும். - என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஆக, நாட்டைப் பீடித்திருக்கும் நோய் யாது என்பதை ஜனாதிபதி சரியாக அடையாளம் கண்டு பகிரங்கமாக அம்பலப்படுத்தியிருக்கின்றார். அந்த நோயைக் களைவதற்கான மார்க்கத்தையும் அவர் கோடி காட்டியிருக்கின்றார். அந்த மருத்துவத்தைச் சரியாக நாட்டுக்குச் செய்வித்து நாட்டை லஞ்ச, ஊழல் நோயிலிருந்து மீட்டெடுக்கும் பொறுப்பு 'வைத்தியராக' அவரிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

என்ன சிகிச்சை அளிக்கப் போகின்றார் வைத்தியர்? பார்த்திருக்கின்றது நாடு.



# என்னை அதானி சந்திக்கவில்லை: முதல்வர் ஸ்டாலின் திட்டவட்டம்

"அமெரிக்காவில் இருக்கும் அதானி வழக்குக்கும் தமிழகத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. என்னை அதானி சந்திக்கவில்லை. நான் அவரை பார்க்கவும் இல்லை."

– இவ்வாறு சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டவட்டமாக கூறியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று விவாதம் நடைபெற்றது. அப்போது, பா.ம.க. உறுப்பினர் ஜி.கே.மணி பேசும்போது,

"அமெரிக்க நீதிமன்றத்தில் ஒரு வழக்கு உள்ளது. இந்திய சூரியஒளி மின்உற்பத்திக் கழகத்திடமிருந்து சூரியஒளி மின் சாரத்தை வாங்குவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டதில், அதில் முறைகேடு நடந்துள்ளதாக தமிழகத்தின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதால், அது உண்மையா, இல்லையா என்பதை அரசு விளக்க வேண்டும்." – என்றார்.

அதற்கு பேரவை தலைவர் மு.அப்பாவு, "இதற்கு மின்சார துறை அமைச்சர் தெளிவான பதிலை கொடுத்துள்ளார்," என்றார். அதற்கு ஜி.கே.மணி, "செய்தி வந்துவிட்டது. அது உண்மையா என்று தெரிய வேண்டும்,"– என்றார்.

அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசும்போது,

"ஜி.கே.மணி இந்த அவையில் மட்டும் அல்ல, அவரது கட்சியை சேர்ந்த தலைவர்கள் வெளியிலும் இதுபற்றி தொடர்ந்து பேசி கொண்டிருக்கின்றனர். அதானியோடு முதல்வருக்கு தொடர்பு உள்ளது. அதானியை முதல்வர் சந்தித்தார் என்று பேசி வருகின்றனர். ஆனால், அவர்கள் வெளியே பேசி கொண்டிருக்கும் அனைத்தையும், இந்த அவையில் ஜி.கே.மணி பதிவு செய்யவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. ஒருவேளை உண்மை தெரிந்து விட்ட காரணத்தால், விட்டு விட்டார்களா என்று தெரியவில்லை.

தமிழகத்தில் அதானி குழுமத்தின் தொழில் முதலீடுகள் குறித்து பொது வெளியில் வரும் தவறான புகார்களுக்கு, மின் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி தெளிவான விரிவான விளக்கத்தை அளித்துள்ளார். அதன் பின்னரும், இதுபற்றி செய்திகள் வந்து கொண்டு தான் இருக்கிறது. அதானி மீது சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை அமைக்க வேண்டும். அந்த விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும், நாடாளுமன்றத்தில் இண்டியா கூட்டணி கட்சிகள் முழக்கமிட்டு வருகின்றன. திமுக மீது குறையும் சொல்லும் பா.ஜ.க., பா.ம.க, நாடாளுமன்றத்தில் இந்த கோரிக்கையை ஆதரிக்கவும், விளக்கி பேசவும் தயாராக இருக்கிறதா?" என்றார்.

அப்போது ஜி.கே.மணி, "நாடாளுமன்றமாக இருந்தாலும், சட்டப்பேரவையாக இருந்தாலும், தமிழகத்தின் பிரச்சினை என்ற காரணத்தால் தான் அரசு விளக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்," –என்றார்.

அதற்கு முதல்வர் ஸ்டாலின், "பலமுறை சொல்லியிருக்கிறோம். இப்போதும் சொல்கிறேன். அதற்கும் தமிழகத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. என்னை அதானி சந்திக்கவில்லை. நான் அவரை பார்க்கவும் இல்லை. நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை அமைக்க எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இதனை ஆதரித்து பேசுவதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?" என்று கேள்வி எழுப்பினார்.

# துணை ஜனாதிபதி பதவிக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம்



நாட்டின் துணை ஜனாதிபதியான ஜெகதீப் தங்கருக்கு எதிராக இந்தியா கூட்டணி உறுப்பினர்கள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர முடிவு செய்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த நவம்பர் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களில் அமளியால் நாடாளுமன்ற இரு அவைகளும் பெரும்பாலான நாள்கள் முடங்கியிருந்தன.

இந்நிலையில், நாட்டின் துணை ஜனாதிபதியான ஜெகதீப் தன்கர் கட்சி ரீதியாக பாரபட்சமாக செயல்படுகின்றார் எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது குறுக்கிடுவதாகவும் கூறி அவர் மீது இந்தியா கூட்டணி உறுப்பினர்கள் நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வரவுள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

# கேரளா செல்கின்றார் முதல்வர் ஸ்டாலின்



தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று கேரளாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கேரள மாநிலம் கோட்டயத்தில் உள்ள வைக்கத்தில் கோயில் நுழைவுப் போராட்டம் தொடங்கப்பட்டு 100 ஆண்டுகள் கடந்துள்ளது. தந்தை பெரியார் சமூகநீதி காக்க போராடிப் பெற்ற வெற்றியை நினைவுகூரும் வகையில், பெரியாருக்கு வைக்கத்தில் நினைவுச் சின்னம் அமைக்க உத்தரவிடப்பட்டு 1994 ஆம் ஆண்டு நினைவிடம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நினைவிடத்தை புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார்.

இதை தொடர்ந்து அமைச்சர் எ.வ.வேலு வைக்கம் சென்று பெரியார் நினைவகத்தில் ஆய்வு மேற்கொண்டார். இதை தொடர்ந்து புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்போது அங்கு பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் புகைப்படங்கள் அடங்கிய நிரந்தர புகைப்பட கண்காட்சிக் கூடம், நூலகம், பார்வையாளர் மாடம், சிறுவர் பூங்கா உள்ளிட்டவை அமைந்துள்ளது.

மேலும் அமர்ந்த நிலையில் பெரியார் சிலை நிறுவப்பட்டுள்ளது. இந்த கட்டிடங்களில் ஏற்பட்ட கரையான் அரிப்பு போன்றவற்றால் நினைவிடம் பழமையானதால் தமிழக அரசு சார்பில் 8.5 கோடி ரூபாவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதை திறந்து வைக்க முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று கேரளா செல்ல உள்ளார்.

கேரள மாநிலம் கோட்டயத்தில் நாளை தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா நடைபெற உள்ளது. பெரியார் நினைவகம் மற்றும் பெரியார் நூலகம் திறப்பு விழாவுக்கு அம்மாநில முதல் அமைச்சர் பினராயி விஜயன் தலைமை தாங்குகிறார்.

பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து சிறப்புரையாற்றவுள்ளார்.

# காசாவில் போரை நிறுத்தப் போவதில்லை: இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு திட்டவட்டம்

இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போர் நிறுத்த முயற்சிகள் தொடரும் நிலையில், காசாவில் தற்போதைக்கு போரை நிறுத்தப் போவதில்லை என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாங்கள் இப்போது போரை நிறுத்தினால், ஹமாஸ் மீண்டும் வந்து தாக்கலாம். இதை நாங்கள் விரும்பவில்லை.

எதிர்காலத்தில் மீண்டும் தாக்குதல்கள் நடைபெறாமல் இருக்க ஹமாஸை அழித்தொழித்தல், அதன் இராணுவ மற்றும் நிர்வாகத் திறன்களை ஒழித்தல் என்ற இலக்கை நிர்ணயித்துள்ளோம்.

எனினும், இந்த இலக்கை நாங்கள் இன்னும் முழுமையாக அடையவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் அண்டனி பிளிங்கன் கருத்து தெரிவிக்கையில்,

“இஸ்ரேலானது ஹமாஸின் இராணுவத் திறனை சிதைக்க முடிந்தது. அதன் தலைமையை அடுத்தடுத்து கொன்று குவித்தது.

அந்த வெற்றிகளுடன், பணயக்கைதிகளை வீட்டிற்கு அழைத்துச் சென்று, அடுத்து என்ன நடக்கும் என்பதைப் புரிந்துகொண்டு போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நேரம் இது.”என்று அவர் தெரிவித்துள்ளார்.







# சிரியாவில் தொடர் தாக்குதல்களை நடத்தும் இஸ்ரேலிய விமானங்கள்

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ் உட்பட நாடு முழுவதும் இஸ்ரேலிய போர் விமானங்கள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றன என அந்தநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், பிரித்தானியாவை தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பு அமைப்பு இராணுவ இலக்குகள் மீது 100 இற்கும் மேற்பட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என குறிப்பிட்டுள்ளது.

இந்த தாக்குதல்களில் ஆயுத உற்பத்தி தொடர்பான ஆய்வு மையமொன்றும் அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.













# அரச விடுதிகளை வினைத்திறனாக பயன்படுத்துவது குறித்து அவதானம்

அரிதாகப்பயன்படுத்தப்படும், ஜனாதிபதி மாளிகைகள் உள்ளிட்ட அரச விடுதிகளைப் பொருளாதார ரீதியில் வினைத்திறனாக பயன்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின் கீழ் உள்ள கொழும்பு, கண்டி, நுவரெலியா, மஹியங்கனை, அனுராதபுரம், கதிர் காமம், யாழ்ப்பாணம், எம்பிலிப்பிட்டிய மற்றும் பெந்தோட்டை ஆகிய பிரதேசங்களிலுள்ள ஜனாதிபதி மாளிகைகளை தவிர ஏனைய ஜனாதிபதி மாளிகைகள் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

இந்த மாளிகைகள் உள்ளிட்ட பல அரச விடுதிகளின் பராமரிப்புக்காகப் பெருமளவு நிதி செலவிடப்படுகின்ற போதிலும், அவை குறைந்த பயன்பாட்டிலேயே உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே அவற்றை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கான முன்மொழிவுகளை முன்வைப்பதற்கு குழுவொன்றை நியமிக்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு பைஸர் முஸ்தபாவின் பெயர் தெரிவு





புதிய ஜனநாயக முன்னணியின் எஞ்சியுள்ள தேசியப்பட்டியல் நாடாளுமன்ற ஆசனத்துக்காக முன்னாள் அமைச்சரான ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபாவின் பெயர் தெரிவு செய்யப்பட்டுத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் 5 இலட்சத்து 835 வாக்குகளைப் பெற்ற, புதிய ஜன நாயக முன்னணி 2 தேசியப் பட்டியல் ஆசனங்கள் உள்ளடங்களாக 5 ஆசனங்களைக் கைப்பற்றியது.

அதற்கமைய, ஒரு தேசியப்பட்டியல் ஆசனத்துக்காக முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், நீண்ட கலந்துரையாடலின் பின்னர், எஞ்சியிருந்த தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசனத்துக்காக, முன்னாள் அமைச்சர் பைஸர் முஸ்தபா, தெரிவு செய்யப்பட்டுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.



# அரிசிக்கான நிர்ணய விலைகளை அறிவித்து வர்த்தமானி வெயீடு

அரிசிக்கான புதிய விலைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியானது.

இதன்படி, அரிசி விற்பனை தொடர்பான சில்லறை விலை மற்றும் மொத்த விற்பனை விலை குறித்த வர்த்தமானி அறிவிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான ஆகக் குறைந்த சில்லறை விலைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியானது.

இதற்கமைய உள்நாட்டு நாடு அரிசி கிலோவொன்றுக்காக நிலவிய 220 ரூபா என்ற அதிகபட்ச சில்லறை விலை 230 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் நாடு அரிசி கிலோவொன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை 220 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் சம்பா அரிசி கிலோவொன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை 240 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்படும் சம்பா அரிசி கிலோவொன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை 230 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் கீரி சம்பா அரிசி கிலோ ஒன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை 260 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசி கிலோவொன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை 220 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்படும் பச்சை அரிசி கிலோவொன்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை 210 ரூபாவாகவும் நிர்ணயம் செய்யப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியானது.

இதனிடையே, உள்நாட்டு வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசி கிலோ ஒன்றுக்கான அதிகபட்ச மொத்த விற்பனை விலை 215 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உள்நாட்டு வெள்ளை மற்றும் சிவப்பு நாட்டரிசி கிலோ ஒன்றுக்கான அதிகபட்ச மொத்த விற்பனை விலை 225 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை மற்றும் சிவப்பு சம்பா அரிசி கிலோ ஒன்றுக்கான அதிகபட்ச மொத்த விற்பனை விலை 235 ரூபாவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கீரி சம்பா அரிசி கிலோ ஒன்றுக்கான அதிகபட்ச மொத்த விற்பனை விலை 255 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

# புதிய டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரத்தை விரைவாக அறிமுகப்படுத்த நடவடிக்கை

புதிய டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரத்தை விரைவாக அறிமுகப்படுத்த அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அதேவேளை, புதிய டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் வரை, தற்போதைய முறையைத் தொடர்ந்து அமுல்படுத்தவும் அமைச்சர்கள் குழு முடிவு செய்துள்ளது.




போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளைக் கருத்திற் கொண்டு, இந்த டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரம் விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.




# யாழில் பரவுவது எலிக் காய்ச்சலா?

## இது வரை 6 பேர் பலி; 40 பேருக்குப் பாதிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பரவுவது எலிக் காய்ச்சலாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் சூழலில் அக்காய்ச்சல் காரணமாக இதுவரை 6 பேர் உயிரிழந்தமையோடு பலர் பாதிக்கப்பட்டமை தொடர்பில் ஆராய இன்று பருத்தித்துறையில் விசேட கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எலிக்காய்ச்சலாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் மர்மக் காய்ச்சலின் காரணமாக பலர் உயிரிழந்த நிலையில் தற்போது மாவட்டத்தில் மேலும் 40 வரையானோர் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நோய் அறிகுறி காணப்பட்டவர்களின் மாதிரிகள் பகுப்பாய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆயினும் குடா நாட்டில் பரவும் காய்ச்சலின் வகை இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

இனம் காணப்படாத காய்ச்சலை எதிர்கொள்வது தொடர்பிலேயே இன்று மாவட்ட சுகாதாரப் பணிப்பாளரின் ஏற்பாட்டில் விசேட கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# சுகாதாரம், வெகுசன ஊடக அமைச்சின் செயலாளராக அனில் ஜாசிங்க நியமனம்

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் புதிய செயலாளராக விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதி செயலாளர், கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க நேற்று காலை கையளித்தார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



# நாடாளுமன்ற இணையத்தில் 'கலாநிதி' நீக்கம்; சபாநாயகரின் கல்வி தகைமை குறித்து சர்ச்சை

இலங்கை நாடாளுமன்றத்தின் இணையத்தளத்தில் சபாநாயகர் அசோக சப்புமல் ரன்வல கலாநிதி பட்டம் பெற்றவர் என்ற குறிப்பு அகற்றப்பட்டுள்ளதை தொடர்ந்து சபாநாயகரின் கல்வித் தகமை குறித்து மீண்டும் கேள்விகள் எழுந்துள்ளன.

முன்னர் கலாநிதி அசோக சப்புமல் ரன்வல என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தற்போது கலாநிதி என்பது அகற்றப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து அவர் தான் கலாநிதி பட்டம் பெற்றவர் என குறிப்பிட்டது எவ்வளவு தூரம் உண்மையானது என்ற கேள்வி எழுந்துள்ளது.





Tenth Parliament of the D.S.R. of Sri Lanka
Hon. Asoka Sapumal Ranwala (Gampaha)

Tenth Parliament of the D.S.R. of Sri Lanka
Hon. (Dr.) Asoka Sapumal Ranwala (Gampaha)

கடந்த 24 மணிநேரத்திலேயே இணையத்தளத்தில் இந்த மாற்றங்களை செய்துள்ளனர்.

இதேவேளை , கூகுள் தேடு பொறி கலாநிதி என்ற காண்பிக்கின்றது என தவறான தகவல்கள் குறித்த ஆய்வாளர் சஞ்சனா ஹட்டொட்டுவ தெரிவித்துள்ளார்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி அநுரவின் ஆட்சியிலாவது கிட்ட வேண்டும்!

## நேற்றைய போராட்டத்தில் ரவிகரன் எம்.பி. வலியுறுத்து





இந்தநாட்டில் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரத்தைக் கண்டுகொள்ளாத நிலையில், புதிதாக ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள அனுரகுமார திஸநாயக்கவின் ஆட்சியிலாவது வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் நாளான நேற்று முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் நடத்திய கவனவீர்ப்பு நடவடிக்கையில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்தபோது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பிலும் அவரின் கவனத்திற்கு கொண்டுவந்திருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதி வேண்டி மிக நீண்ட நாள்களாக வீதிகளில் இறங்கி தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தங்களுடைய உறவுகளை வட்டுவாகல் பகுதியிலும், ஓமந்தையிலும், முகாம்களிலும், இப்படியாக பல இடங்களிலும் கைதுசெய்து சென்ற இராணுவத்தினர், அவ்வாறு கைதுசெய்தவர்களை மீளக் கையளிக்கவில்லை, அத்தோடு அவ்வாறு கைதுசெய்து கொண்டு செல்லப்பட்டவர்கள் எங்கே எனவும் இராணுவத்தினர் முறையான பொறுப்புக்கூறல்களையும் சொல்லவில்லை என்ற சீற்றத்தில் அந்த மக்கள் உள்ளனர்.

இந் நிலையில் வடகிழக்கில் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள் தொடர்போராட்டத்துடன், கண்ணீரோடு தமது நாள்களை நகர்த்தி வருகின்றனர்.

இவர்களை மாறி, மாறி வரும் அரசாங்கங்களும் கண்டுகொள்ளாத நிலையே தொடர்ந்தும் நீடிக்கின்றது.

இந்நிலையில் கடந்த 04ஆம் திகதியன்று தமிழரசுக்கட்சியின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியைச் சந்திக்கும்போது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பாகவும் அவரிடம் பேசினோம்.

அவர் இந்த விடயம் தொடர்பில் பரிசீலனைசெய்வார் எனவுன், கூடிய விரைவில் இதற்கான ஒரு வழியை ஏற்படுத்தித் தருவார் எனவும் தெரிவித்திருந்தார்.

அந்தவகையில் இந்த ஜனாதிபதியினுடைய ஆட்சியிலாவது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்கவேண்டும்.

குறிப்பாக இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி கண்ணீரோடு இந்த வீதிகளில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெற்றோர்கள் பலர் இறந்துபோன அவலங்களும் இங்கே நிகழ்ந்திருக்கின்றன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் கண்ணீருக்கு முன்னைய மஹிந்த அரசாங்கம் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

தற்போது இந்த நாட்டைப் பொறுப்பேற்றுள்ள இந்த அரசாங்கம் பலத்த பெரும்பாண்மைப் பலத்தோடு இருக்கின்றது.

இந்த அரசாங்கத்தைச் சார்ந்தவர்களும் இந்த நாட்டில் ஒருகாலத்தில் போராட்டங்களில் ஈடுபட்டவர்களதான்.. அந்த வகையில் எமது போராட்ட வலியையும் அவர்களும் உணர்வார்கள் என நம்புகின்றோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீள ஒப்படையுங்கள், அல்லது அதற்கான பதிலைச் சொல்லுங்கள் என்றுதான் நாம் கேட்கின்றோம்.

இந்த உறவுகள் இன்னும் எவ்வளவு காலத்திற்கு உறவுகளைத் தேடி அலைவது? அந்த வகையில் இந்த உறவுகளுக்கான தீர்வை காலம் தாழ்த்தாது உடனடியாக வழங்கவேண்டும். அதற்காக நாம் தொடர்ந்து குரல் கொடுப்போம் – என்றார்.

# வன்னியில் 338 வேட்பாளர்கள் இதுவரையில் தேர்தல் செலவு அறிக்கையைச் சமர்ப்பித்தனர்

(கி.வசந்தன்)

வன்னி தேர்தல் மாவட்டத்தில் நேற்று வரை 338 பேர் தமது பொதுத் தேர்தல் பிரசாரச் செலவு அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் சில தரப்புக்கள் பதிவுத் தபாலில் அவற்றை அனுப்பியுள்ளமையால் அவை கிடைக்கப் பெறுவதில் தாமதம் ஏற்ப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள், தங்களது தேர்தல் செலவு அறிக்கையை கடந்த 6ஆம் திகதி நள்ளிரவுக்கிடையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

அந்தவகையில், வன்னி தேர்தல் மாவட்டத்தில் 14 அரசியல் கட்சிகள் மற்றும் 20 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் 338 பேர் தமது தேர்தல் செலவு அறிக்கைகளைச் சமர்பித்துள்ளனர் என மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் 23 அரசியல் கட்சிகளும் 25 சுயேச்சைக் குழுக்கள் என மொத்தமாக 48 தரப்புக்களை சேர்ந்த 432 பேரின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன..

அவர்களில் 5 சுயேச்டைக் குழுக்களினதும் 9 அரசியல் கட்சிகளையும் சேர்ந்த 14 தரப்புக்களின் செலவு அறிக்கைகள் கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிலதரப்புக்கள்பதிவுத்தபாலில் செலவு அறிக்கையை அனுப்பி வைத்துள்ள நிலையில் அவை கிடைக்கப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# கொத்மலை ஆடைதொழிற்சாலையின் ஊழியர்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்









(பொகவந்தலாவ நிருபர் எஷ்.சதீஷ்)

கொத்மலை வீ.டி.எம். ஆடை தொழிற்சாலையின் ஊழியர்கள் நேற்று செவ்வாய்கிழமை ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

அங்கு தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு ஐயாயிரம் ருபா சம்பள அதிகரிப்பை வழங்குமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த எழு நாள்களாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

“இன்று அரிசி முதல் தேற்காய் வரை அனைத்து பொருள்களும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளன. அதிகாரிகள் தமக்குத் தேவைப்படுகின்ற அனைத்தையும் பெற்றுக்கொள்கிறார்கள். நாங்கள் ஒரு போதும் தொழிற்சாலையை மூடுமாறு கூறவில்லை. ஆனால் இவர்கள் தொழிற்சாலையினை மூடி, எங்களை வெளியில் அனுப்பியுள்ளனர். பஞ்சர் இயந்திரத்தை நிறுத்தி வைத்து கொண்டு எங்களை தொழிற்சாலையின் உள் அனுமதிக்க மறுப்பு தெரிவிக்கின்றனர். எமக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டிய உணவுகளைக் கூட வழங்குவதில்லை. இதேவேளை ஆடைதொழிற்சாலையின் வளாகத்தில் பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபடுத்தபட்டுள்ளனர்.

– என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்



# இன்றைய ராசி பலன்கள் - 11.12.2024




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முன்னேற்றம் தாமதமாக ஏற்படும். இதனால் கவலை ஏற்படும். பயணங்கள் ஆறுதல் அளிக்கும்.

பணியிடச்சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணிகளில் தவறுகள் நேரலாம். உங்கள் செயல் திறனைக் கண்டு மேலதிகாரிகள் அதிருப்தி அடைவார்கள்.

இன்று இருவரிடையே மகிழ்ச்சி காணப்படாது. மந்தமான மனநிலை காரணமாக இருவரும் மகிழ்ச்சியாக இருக்கும் நிலை காணப்படாது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

தோல் அரிப்பு ஏற்படாமல் இருக்க ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது.




இன்று எதிர்பாராத நன்மைகள் நடக்கும். உங்கள் சமயோசித புத்தி மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் செயல்திறன் திறமையை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். நீங்கள் விரைந்து பணிகளை முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வோடு நடந்து கொள்வீர்கள். இது உறவை இன்னும் பலப்படுத்தும்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும்.காப்பீடு அல்லது பூர்வீக சொத்து வகையில் பண வரவு காணப்படும்.

உங்களின் திருப்தியான மன நிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் விருப்பங்கள் மற்றும் இலக்குகளில் வெற்றி பெறுவதற்கு உகந்த நாள். புதிய தொடர்புகளை இன்று நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற இயலும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நம்பிக்கையோடு வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கமும் பிணைப்பும் அதிகரிக்கும்.

நிதிநிலைமை இன்று பிரகாசமாக இருக்கும்.பணத்தை ஆக்க பூர்வமான விடயங்களுக்குச் செலவு செய்வீர்கள்.

உங்களின் உறுதியான மன நிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




முக்கிய விடயங்களை இன்று தொடங்குவதற்கு உகந்த நாள் அல்ல. இன்று அமைதியின்மையும் பாதுகாப்பின்மை உணர்வும் காணப்படும். பிறருடன் பேசும் போது கவனம் சேவை. பிரார்த்தனை மூலம் அமைதி பெறலாம்.

இன்று பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. திறமையாக பணியாற்ற திட்டமிட வேண்டியது அவசியம்.

இன்று நன்மை காண பொறுமை அவசியம். இன்று உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் பேண இந்த உணர்வை தவிர்க்க வேண்டும்.

பொறுப்புகள் அதிகமாக காணப்படும். குடும்பச் செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று உணர்ச்சிவசப்பட நேரலாம். இதனால் தன்னம்பிக்கை இழக்க நேரிடும். இதயம் கனப்பதாக உணர்வீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் செய்ய இயலாது. இதனால் கவலை ஏற்படும். சக பணியாளர்களுடனான உறவு முறை சிறப்பாக இருக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு பணம் கரையும். இன்று பணத்தை சேமிக்க இயலாது.

தொண்டை சம்பந்தமான பிரச்சினை மற்றும் தலை வலி காணப்படுகின்றது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை..




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் அக்கம்பக்கத்தினர்கள் ஆதரவாக இருப்பார்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். முக்கிய முடிவுகள் இன்று நல்ல பலனளிக்கும்.

உங்கள் செயல் திறனுக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்களின் அபாரமான திறமையைக் கண்டு சக பணியாளர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணத்தை சேமிப்பதற்கான சிறந்த வாய்ப்புகள் உள்ளன. பங்கு போன்ற இதர வகைகள் மூலமாகவும் பணம் வரும் வாய்ப்பு உள்ளது.

கடவுள் அருளால் இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வலிமையுடன் இருப்பீர்கள்.




இன்று வெற்றி பெறுவதற்கு திட்டமிட வேண்டியது அவசியம். எளிதில் வெற்றி காண்பதை கடினமாக உணரவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிச்சுமை உங்களுக்கு கவலையை அளிக்கும். பாதுகாப்பின்மை உணர்வு நிறைந்து காணப்படும்.இதனால்பணிகளைதிறமையாகசெயல்படுத்த இயலாது.

உங்கள் உறவில் திருப்திகரமான நிலை இருக்காது. உங்கள் அகந்தைப் போக்கை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள்.இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்காது. உங்களின் நெருங்கிய நபர் ஒருவருடைய உடல் நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.




இன்று திருப்தி குறைந்து காணப்படும். கவனமாக திட்டமிட்டால் வெற்றி பெறலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் கடினமாக இருக்கும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. தாமதங்களை தவிர்க்க முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள். உங்கள் மனதை மாற்றிக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும். இதனால் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க முடியும்.

அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை காரணமாக பண இழப்பு நேரலாம்.இன்று பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலி ஏற்படலாம். தகுந்த மருத்துவ சிகிச்சை ஆறுதல் தரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.12.2024




இன்று மந்த நிலையும் பாதுகாப்பின்மை உணர்வும் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு திருப்தியை அளிக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணிகளை ஒப்படைக்கும் முன்பு சரிபார்த்து தருவது சிறந்தது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். என்றாலும் அகந்தை உணர்வு தலை தூக்கும். அதனை தவிர்த்து இருவரும் மனம் திறந்து பேச வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. அதிகரிக்கும் செலவுகளை சமாளிப்பது கடினமாக உணர்வீர்கள். இன்று அதிகமாக சேமிக்கவும் இயலாது.

இன்று ஆரோக்கியம் ஸ்திரமாக இருக்கும். உங்கள் தந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று வளர்ச்சி காணப்படும். உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை மூலம் இலக்கில் வெற்றி பெறுவீர்கள். ஸ்திரமான முடிவுகள் வெற்றிக்கு வழி வகுக்கும்.

பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. உங்களின் நேர்மையான முயற்சி உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

நீங்கள் இருவரும் நல்ல தொடர்புடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். வெளியிடங்களுக்கு சென்று ஒன்றாக இணைந்து மகிழ்ச்சியாக நேரத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் கடின உழைப்பிற்காக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் இன்று கூடுதல் பண வரவு காணப்படும்.

இன்று ஆற்றல் நிறைந்து காணப்படுவீர்கள். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அபாரமான நாள். உங்கள் இனிமையான வார்த்தை உங்கள் நெருங்கிய உறவுகளை மகிழ்ச்சி யுறச் செய்யும். உங்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். சக பணியாளர்களுக்கு நீங்கள் உதாரணமாக இருப்பீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையை வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் அவருக்கு மகிழ்ச்சி உண்டாகும். நீங்கள் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இருவரும் சிறந்த ஜோடியாகத் திகழ்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். நிதிநிலை சுதந்திரமாக இருக்கும். உங்களின் வங்கியிருப்பு அதிகரிக்கும்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். இது உங்கள் மகிழ்ச்சியைக் குறைக்கும். உங்கள் வளர்ச்சியில் தாமதங்கள் காணப்படும். விரைந்து முடிவெடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை மேற்கொள்ளும் போது திட்டமிட வேண்டும். பணிச்சுமை அதிகமாக காணப்படும். வெற்றி பெறுவதற்கு திறமையாக கையாள வேண்டும்.

உங்களின் மாறுபடும் மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். எனவே சம நிலையோடு இருந்து உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். சேமிப்பதில் கட்டுப்பாடு காணப்படும். இந்தச் சூழ்நிலைகளை விவேகத்துடன் கையாளக் கற்றுக் கொள்ளுங்கள்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.




